2017 ஜூன் 22]

முறையில் செய்து வந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கின்றது இந்த அரசு. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில், நான் கொடுத்த கோரிக்கையை ஏற்று, கோயிலை புனரமைத்து, குடமுழுக்குச் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

கால்நடைக் கிளை நிலையம்

***13503—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, M. வெள்ளாளப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களில் எந்த முதலமைச்சரும் செய்யாத ஓர் அற்புதத் திட்டத்தின்மூலம் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கி, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், இதுமாதிரி செய்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இல்லை. இல்லை. இப்படியெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) அதிகமாகப் பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, ஏழைகளின் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு*

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

விவசாயிகளுக்கு இதுவரையில் எந்த மாநிலத்திலும் எந்த முதலமைச்சரும் வழங்கிடாத அளவுக்கு தமிழகத்தில் பயிர் செய்த அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணத் தொகை வழங்கி, தமிழகத்தின் நீர் ஆதாரம் மற்றும் இயற்கை விவசாயத்தைப் பெருக்கிட ஏரிகளிலுள்ள வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி விவசாயிகளின் மனதில் இடம் பிடித்த மற்றும் அம்மாவின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, எம். வெள்ளாளப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள் கேட்டுள்ளார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, எம். வெள்ளாளப்பட்டி கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக உள்ளதால், கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி நா. மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டுக்கு என்னை அடையாளம் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வெண்மைப் புரட்சி கொண்டு வந்ததும் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். பசுமைப் புரட்சி கொண்டு வந்ததும் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். விலையில்லா ஆடு, மாடு வழங்கியதும் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான். அம்மா என்று அழைக்கின்ற வாயில்லா ஜீவன்களுக்கு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஊத்தங்கரை தொகுதி,

2017 ஜூன் 22]

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, எம். வெள்ளாளப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) திருவெறும்பூர் O.F.T. துப்பாக்கி தொழிற்சாலை, தனியார்மயமாக்கும் முயற்சியைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். (குறுக்கீடு)* allow *செய்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

***திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தலைவர் மற்றும் செயல் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருவெறும்பூர் தொகுதியில் இருக்கின்ற* O.F.T. *என்கின்ற துப்பாக்கி தொழிற்சாலை கடந்த 50 ஆண்டுகளாக மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந்தத் துப்பாக்கி தொழிற்சாலை நம் மாநிலம் மட்டுமல்லாது, வெளி மாநிலங்களுக்கும், காவல் துறைக்கும் தேவையான துப்பாக்கிகளைத் தயாரித்து வழங்கிக்கொண்டிருக்கிறது. நமது மாநிலத்திற்கு மட்டுமல்லாது, இந்திய இராணுவத்திற்கும், துணை இராணுவத்திற்கும் இங்குதான் ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றன. கடந்த 31—5—2017 அன்று* NITI Aayog *மூலமாக, குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் இதனை தனியார்மயமாக்கும் முயற்சியில் மத்திய பி.ஜே.பி. அரசு ஈடுபட்டிருக்கின்றது. இது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற ஒரு தொழிற்சாலையாக இருந்தாலும், அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பணியாளர்கள் நம்முடைய தமிழகத்தினைச் சேர்ந்த மக்கள்தான். அதிலும், என்னுடைய தொகுதியைச்*